Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு
EELA NADU

RECEIVED
-7- 7
Periodicals Division
Library

இனம் இனம் இனம்
"மில்க்வைற் நீல சோப்"
பாவிப்பாளருக்கு ஒரு அதிர்ஷ்டம்
எங்கள் சோப்பின் உறைகளைச் சேமியுங்கள்
50 உறைகளுக்கு
அழகான—கவர்ச்சியான—உறுதியான
"மார்க்கெட்டிங் பாக்"
இனமாக உங்களுக்கு கிடைக்கும்.
எங்கள் காரியாலயத்தில் அல்லது
விற்பனை வானில் உறைகளைக்
கொடுத்து பரிசைப் பெறலாம்.

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

குரோதி மார்கழி 24 ஆம் நாள் றம்ழான் பிறை 3 (7-1-65) வியாழக்கிழமை 329

## இந்தியாவிலிருந்து வெங்காயம் இறக்குமதி
### யாழ்ப்பாணத்தில் வீசிய சூருவளியின் எதிரொலி

கொழும்பு, புதன்

யாழ்ப்பாணத்தில் வீசிய சூருவளி காரணமாக இந்த வருடத்தில் பல மாதகாலங்களுக்கு இந்தியாவிலிருந்து வெங்காயத்தை இலங்கை கட்டாயமாக இறக்குமதிசெய்ய வேண்டியநெருக்கடியொன்று ஏற்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட சூருவளியினால் யாழ்ப்பாணப் பகுதியில் வெங்காயச்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டதே இந்த நிர்ப்பந்தத்துக்கு காரணமாகும்.

இலங்கைக்கு தேவையான வெங்காயத்தில் கூடிய சதவிகிதம் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே உற்பத்தி செய்யப்பட்டுவந்தது. அடுத்த பெப்ரவரி மாதத்தில் அறுவடை செய்ய விருந்த வெங்காயப் பயிர்கள் சூருவளியினால் அனேகமாக முற்றிலும் சேதமடைந்துள்ளன

## 'ஈழநாடு' சூருவளி கஷ்டநிவாரண நிதி

"ஈழநாடு" சூருவளி கஷ்டநிவாரண நிதிக்கு மேலும் பல அன்பர்கள் உதவிகள் அளித்துவருகின்றனர். சூருவளியால் பாதிக்கப்பட்ட மக்களின்மீது இரக்கம் கொண்ட பலர் தங்களால் இயன்ற உதவிகளை, பொருள்கள் மூலமாகவும் பணம் மூலமாகவும் கொடுத்துதவி வருகின்றனர் துன்பமுறும் மக்களுக்கு அன்பர்கள் அளிக்கும் உதவி எந்தத்தொகையாக விருந்தாலும் அந்த உதவி உங்களுக்கு நீங்களே செய்து கொள்ளும் உதவியாக விருக்கும் என்பதை மறுக்கமுடியாது. இயற்கையின் கோரப்பிடில் சிக்கி தங்கள் உற்றார் உறவினர்களையும் பொருட்கள் பண்டங்களையும் இழந்து தவிக்கும் குடும்பங்களுக்கு நீங்கள் செய்யும் இந்த பேருதவி உங்களுக்குக் கிடைத்திருக்கும் ஒரு புண்ணிய வாய்ப்பாகும்.

சூருவளியினால் பாதிக்கப்பட்டுத் துன்பமுறும் மக்களுக்கு உதவிசெய்ய விரும்பும் அன்பர்கள் தமது அன்பளிப்பை

"புயல் கஷ்டநிவாரண நிதி"

"ஈழநாடு", த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்

என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். வசூல் விவரங்கள் அவ்வப்போது 'ஈழநாடு'பத்திரிகையில் வெளியிடப்படும்.

| | |
|---|---|
| எஸ். சுப்பிரமணியம் அன் கோ ஜுவலரி யாழ்ப்பாணம் | 40-00 |
| எஸ். கே. பொன்னையா, பருத்தித்துறை. | 3-00 |
| செ. ஞானசேகரம் கொக்குவில் மேற்கு | 8-00 |
| கா. முருகேசபிள்ளை அராலி தெற்கு | 2-00 |
| வி. சபாரத்தினம் நவாலி | 8-00 |
| க. சிவபுண்ணியமூர்த்தி அராலி | 2-00 |
| கா. சிவசுந்தரம் ஆனைக்கோட்டை | 1 |
| க. குலேந்திரராசா ஆனைக்கோட்டை | 1 |
| ஓரன்பர் | 2 |
| ஆ. பொன்னர் | 5 |
| ஓரன்பர் | 10 |
| கே பரஞ்சோதி பிறவுண்ரோட் நீராவியடி யாழ்ப்பாணம் | 2 |
| வல்வை ஈழநாடு பத்திரிகை ஏஜண்டு | 5 |
| எஸ் நாகமணி அரியாலை | 2 |

### 'ஈழநாடு' நிவாரண நிதி
#### வசூல் ரூபா 11,000

'ஈழநாடு சூருவளி கஷ்ட நிவாரணநிதி'க்கு அன்பர்களிடமிருந்து தொடர்ச்சியாக நிதி உதவிகள் கிடைத்தவண்ணம் இருக்கின்றன. சூருவளியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அன்பர்கள் அளித்திருக்கும் நிதி உதவிகள் நேற்றுவரை பதினொராயிரம்ருபாவையும் தாண்டிவிட்டதென்பதை மகிழ்ச்சியுடன் - நன்றியுணர்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். அன்பர்கள் அனுப்பும் நிதி, மற்றும் பொருள் உதவிகள் அவ்வப்பொழுது 'ஈழநாடு' பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளியிடப்படும்.

அண்மையில் ஏற்பட்ட சூருவளியினால்
காணமற்போனவர்களின் பெயர்விபரங்கள்
கடைசிப் பக்கம் பார்க்க

# பிரதமர் ராஜினமா
## செனட்டர் பதவியிலிருந்து
### அத்தனகலை தொகுதியில் போட்டியிடுவார்

கொழும்பு, புதன்

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்று தமது செனட்டர் பதவியை ராஜினமா செய்துகொண்டார். மார்ச்மாதம் நடைபெறும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் பொருட்டே இவர் செனட்டர் பதவியிலிருந்து ராஜினமா செய்துள்ளார்.

செனட்டர் பதவியை ராஜினமா செய்துள்ள பிரதமர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் அத்தனகலைத் தொகுதியில் போட்டியிடுவார்.

கூட்டரசாங்கம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, பிரதமருக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் எந்தத்தொகுதியில் அவர் போட்டியிடுவது என்ற பிரச்னை ஏற்பட்டதைத்தொடர்ந்து, அவர் செனட்டர் பதவியை ராஜினமாச் செய்வாரா? அத்தனகலை தொகுதியில் போட்டியிடுவாரா? என்ற புதிய பிரச்னைகள் கிளம்பின. இன்று அவர் செனட்டர் பதவியிலிருந்து ராஜினமா செய்துகொண்டதைத் தொடர்ந்து அவர் அத்தனகலைத் தொகுதியில் போட்டியிடுவது நிச்சயமாகிவிட்டது.

அரசியல் சட்ட அமைப்புக்கு ஏற்கவே பிரதமர், செனட்டர் பதவியிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார். இதனால் அவரின் பிரதமமந்திரிப் பதவி குறித்து எதுவித குந்தகமும் ஏற்படாது. இரு சபைகளின் அங்கத்தவராயில்லாத ஒருவர் நான்கு மாத காலத்திற்கு மந்திரிப்பதவி வகிக்கலாம்.

## கிணற்றில் கண்டெடுக்கப்பட்ட 18 வெள்ளித் தகடுகள்
### மயிலிட்டியில் பொலிஸார் சோதனை

மாவிட்டபுரம், புதன்

இன்று காங்கேசன்துறை விசேஷ பிரிவு பொலிசாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மயிலிட்டி காசநோயாளர் ஆஸ்பத்திரிக்கு அருகில் உள்ள காணி ஒன்றில் உள்ள பாழ் கிணற்றில் ஒரு சிறு பையினுள் வெள்ளித் தகடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அந்தப் பையை பொலிஸ் உத்தியோகத்தரான குணசேகரா கிணற்றில் இறங்கி எடுத்தார்.

சார்ஜண்ட் குருநாதபிள்ளையின் தலைமையில் பொலிஸ் உத்தியோகத்தர்களான கனகசபை, வீரசிங்கம் ஆகியோர் அந்தப் பையைக் கொண்டு வந்து காங்கேசன்துறை பொலிஸ்நிலயத்தில் உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு சௌரத், பிரதம இன்ஸ்பெக்டர் திரு. ரீ ஏ. போவி ஆகியோர் முன்னிலையில் சமர்ப்பித்தனர். பையைத் திறந்து பார்த்தபோது பதினெட்டு வெள்ளித்தகடுகள் காணப்பட்டன. இது சம்மந்தமாக ஒருவரும் கைதுசெய்யப்படவில்லை. பொலிசார் இவற்றை காங்கேசன்துறை உதவி சுங்க தடுப்பு அதிகாரி திரு. தெய்வேந்திரத்திடம் சமர்ப்பித்தார்கள். இது சம்பந்தமாக விசாரணை செய்த திரு தெய்வேந்திரம் கைப்பற்றப்பட்ட தகடுகள் வெள்ளிதான் என்பதையும் இதன் பெறுமதி 1980 ரூபாய் என்பதையும் ஊர்ஜிதம்செய்தார். இவற்றை அவர் யாழ்ப்பாணம் உதவிக் கலக்டர் திரு. எம். ஆனிஸ் முன்னிலையில் ஆஜர்செய்தபோது அவற்றை பறிமுதல் செய்யும்படி உத்தரவிட்டார்.

## அபேட்சகர்

கொழும்பு, புதன்

சிறிலங்கா, சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த அபேட்சகர்களின் கூட்டு விபரம்பற்றி இன்றிரவு இறுதி முடிவு செய்யப்பட்டதாகவும், இந்தப் பட்டியல் வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் எனவும் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படவிருக்கும்
தமிழ் பேசும் படத்தில் பங்குபற்றுவதற்குக்
கீழ்க்காணும்

கலைஞர்கள் தேவை

நடிகர், நடிகையர்—நடனக் கலைஞர்கள்
பின்னணிப்பாடகர்கள்—சித்திரக் கலைஞர்கள்
ஒப்பனையாளர்கள்—படப்பிடிப்பு உதவியாளர்

திறமை, தகுதி முதலிய விபரங்களுடன்
(நடிகர், நடிகையர் அண்மையில் எடுத்த பாஸ்போட் அளவு போட்டோப்பிரதியுடன்)20-1-65க்கு
முன்னதாகக் கடித மூலம் விண்ணப்பிக்கவும்.

மகம் மூவீஸ்

50- நாச்சிமார் கோவில் வீதி - யாழ்ப்பாணம்.

குறிப்பு: சினிமாவுக்கு ஏற்ற கதையம்சத்துடன், இரு மணி நேரத்தில் முடிவுறக்கூடிய நாடகங்களை (நடிக, நடிகையருடன்) தயாராக வைத்திருக்கும் கலை மன்றங்களின் கோரிக்கைகளுக்கு முக்கிய இடமளிக்கப்படும்.

## புதிய தேர்தல் சட்டங்கள்

கொழும்பு, புதன்

புதிய தேர்தல் சட்டங்களை தேர்தல் கமிஷனர் திரு. எவ் ஏ. டி. அபயசிங்கா வர்த்தமானிமூலம் தெரிவித்துள்ளார்

முஸ்லீமக்கு

எந்தச் சிறு காரியத்தைச் செய்தாலும் சரி, உனது உள்ளம், மனம், புத்தி அனைத்தையும் அதில் ஒருமைப் படுத்து. இது தான் வெற்றி தரும் ரகசியம்.

— சுவாமி சிவானந்தர்.


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மார்கழி மீ 24 உ (7-1-65)


## காங்கேசன்துறை—கோடிக்கரை வழி

சூறுவளி காரணமாக தனுஷ்கோடி — தலைமன்னார் பாதை தடைப்பட்டுள்ளதால், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பிரயாணிகள், சாமான்கள் போக்கு வரத்து சென்ற இரண்டு வாரங்களாக அனேகமாக நின்று விட்டது. இதனால் இருதேச மக்களுக்கும் ஏற்பட்டுள்ள வசதியீனங்கள் கொஞ்சமன்று.

பாம்பன் பாலம் கட்ட பல மாதங்கள் ஆகுமாம். அதற்கு இடையே கொழும்பு-தூத்துக்குடிக் கப்பல் பாதையை மீண்டும் ஏற்படுத்தலாம் என்றும் வேறு பல பல யோசனைகளும் கூறப்படுகின்றன. இது மிக முக்கியமான விஷயம். சிறப்பாக யாழ்ப்பாணத்துக்கு இதில் அதிக சிரத்தையுண்டு. பாம்பன், தனுஷ்கோடி வழி ஏற்படுமுன் தொன்று தொட்டு, காங்கேசன் துறை-கோடிக்கரை மூலமே இரு நாடுகளுக்கும் போக்கு வரத்துகள் வெகுவாக நடந்து வந்துள்ளன. இதுவே இயற்கையான முக்கிய பாதை. பிரிட்டிஷ் ஆதிக்கம் ஏற்பட்டபின், இலங்கை தேயிலைத் தோட்டங்களுக்கு ஆட்கள் கொண்டு வருவதற்காக மண்டபம் முகாமை ஏற்படுத்தி, தனுஷ்கோடி-தலைமன்னார் வழியைத் திறந்து விட்டு, காங்கேசன் துறைப் பாதையைக் கைவிட்டு விட்டனர். இதனால் பிரயாணங்களுக்கும் சாமான் போக்குவரத்துக்கும் பல இடைஞ்சல்கள் ஏற்பட்டுள்ளன.

இப்போது, இவ்விஷயத்தைப் பற்றி அடியோடு புனராலோசனை செய்யப்படுவதாலும், மண்டபம் முகாம் மூடப்பட்டு விட்டதாலும், இலங்கைத் தோட்டங்களுக்கு தமிழ் நாட்டிலிருந்து ஆட்கள் வருவதும் தடைப்படுத்தப்பட்டு விட்டதாலும், மீண்டும் காங்கேசன்துறை-கோடிக்கரை வழியைத் திறப்பது பலவிதங்களிலும் நன்மையாகும். சேது சமுத்திர திட்டத்தை நடத்தி வைக்க இந்தியா முனைந்துள்ளதால், காங்கேசன் துறை பாதையைத் திறக்க வேண்டுமென்று, சிறப்பாக யாழ்ப்பாண பொதுஸ்தாபனங்களும் பொது மக்களும் ஏகோபித்துக் கேட்க இது தக்க சமயமாகும்.

அரசாங்கம் வகுப்பு வாத காரணங்களுக்காக இந்த யோசனையை ஒவ்வாதென்று சிலர் சொல்லலாம். ஆனால் அதற்காக யாழ்ப்பாண மக்கள் சியமான இந்தக் கோரிக்கையை வற்புறுத்தாமல் இருக்கக் கூடாது. காங்கேசன் துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதாக ஏற்கெனவே அரசாங்கம் உறுதி கூறியுள்ளது. அமுக பிணைக்குத்தன் பால் கிடைக்கும் இப்பகுதி மக்களுக்கு உயிர் போன்ற முக்கிய விஷயமாதலாலும் கட்சி முதலிய வேற்றுமைகளுக்கு இதில் இடமில்லையாதலாலும் இந்தப்பாதையை மீண்டும் திறக்க எல்ல முயற்சிகளையும் செய்ய வேண்டும் இது யாழ்ப்பாணத்துக்கு மட்டுமின்றி, இலங்கை அரசுக்கும் இந்தியா-இலங்கை நல்லுறவுக்கும் மிக நன்மை பயக்குவதாக இருக்கும்.

—

## சபாஷ் இலங்கை!

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஆமதாபாத்தில் நடந்த மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் பந்தயத்தில் இலங்கை கோஷ்டி பெரும் வெற்றி பெற்றுள்ளது மகிழ்ச்சியுடன் பாராட்டத்தக்கதாகும் இதை யாருமே எதிர்பார்க்கவில்லை. முந்திய இரு 'டெஸ்ட்' பந்தயங்களைப்போலவே இதுவும் இந்தியாவின் வெற்றியில் முடியுமென்றே பலரும் கருதினர். என்றாலும் நமது கோஷ்டியினர் பெரிதும் போராடி வெற்றியீட்டியுள்ளது, இலங்கையின் புகழை உயர்த்தியுள்ளதுடன், எதிர்காலத்துக்குப் புதிய நம்பிக்கை அளிப்பதாகவும் உள்ளது கிரிக்கெட் உள்ளிட்டு எந்த விளையாட்டுகளிலும் வெற்றி தோல்வி முக்கியமல்லவென்று கூறுவர். என்றாலும் பாகிஸ்தானை சமீபத்தில் இலங்கை கிரிக்கெட்டில் வென்றதுடன், இந்தியாவையும் ஓர் ஆட்டத்தில் வெல்ல முடிந்துள்ளதால், இலங்கையின் மதிப்பு கிரிக்கெட் உலகில் உயர்ந்துள்ளது. இந்த விளையாட்டின் மூலம் அண்டை நாட்டு மக்களிடையே தப்பெண்ணங்கள் நீங்கி, நல்லுறவும் பரஸ்பர ஒத்துழைப்பும் வளர்வதாக இருக்குமென்றே நம்புவோம்.

சூறுவளியின் பின்....

# போர்க்களமாகியிருக்கும் மன்னார் பகுதி

— நமது அலுவலக நிருபர் —

## 3

பட்டினத்திலிருந்து புறப்பட்டதும் நாம், முதன் முதலில் சென்று பார்வையிட்ட கிராமம் பணங்கட்டிக் கொட்டுவான். இது நகருக்கு மிகவும் அண்மையில் உள்ள கிராமம் கடற்கரையோரமாக அமைந்துள்ளது. இங்கு மீனவர்கள் தான் அதிகமாக வசிக்கிறார்கள். இந்தக் கிராமத்தில் நிமிர்ந்து நிற்கும் குடிசை எதுவும் நமது கண்ணில் தென்பட்டதாக ஞாபகமில்லை. மரங்கள் எல்லாம் அடிபெயர்ந்து வீழ்ந்திருந்தன. தோணிகளும், படகுகளும் நடுக்கிராமத்தில் கிடந்தன

சிலாவத்துறை, அரிப்பு ஆகிய கிராமங்களும் மீனவர்கள் கிராமங்களே. இங்கும் குடிசை வீடுகள் தரைமட்டமாகியும் வீடுகளின் கூரைகள் தூக்கி எறியப்பட்ட காட்சியுமே கண்களை வேதனைப்படுத்தின. இவை நகரிலிருந்தும் ஒதுங்கிய இடங்களாக இருப்பதால் இங்கு போதிய நிவாரண உதவி எதுவும் கிடைக்கவில்லை என்று எம்மைக் கூட்டிச் சென்ற பொறுப்பு வாய்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். வங்காலை, நகரிலிருந்து 6 மைல் தொலைவில் உள்ளது. சூறுவளியின் போது கடலுக்குப் போகாமலே பொங்கியெழுந்த கடல் அலைகளுக்கு 13 மீனவர்கள் இக்கிராமத்திலிருந்தும் இரையாகினராம்.

தோட்டவெளி என்ற கிராமத்தில் கண்ணால் காணக் கூடாத காட்சியை நாம் கண்டோம் என்றே கூறவேண்டும் ஆயிரம் ஆயிரமாக தென்னை மரங்கள் வீழ்ந்தும், அடிபெயர்ந்தும், சாய்ந்தும், ஓலைகள், வட்டுகள் சிதறுண்டும் கிடக்கும் காட்சியை கண்ட எவரும் மனமுருகத்தான் செய்வர். நமக்கு நாள் செல்வம் தரும் அந்த மரங்களின் சொந்தக்காரர்கள் உள்ளம் எத்தனை பாடுபடும். காய் தொங்கும் தென்னைகளும், பருவம் வந்த இளம் தென்னைகளும் பட்டினியால் வாடும் மக்களைப் போலவே வாடியும் வதங்கியும் காணப்பட்டன. இது போன்ற சோகக் காட்சியையே தாராசகுண்டு என்ற இடத்திலும் காண முடிந்தது. இங்கே வாழை மரங்களும் இதே கதிக்குள்ளாகியிருக்கின்றன.

பேசாலை என்ற இடத்தில் அரசாங்க ஐஸ் தொழிற்சாலைகூட சேதத்துக்குள்ளாகியுள்ளது. அதுபோலவே புகையிரத நிலையமும், புகையிரதப் பாதைகளும் சேதத்துக்குள்ளாகின பொதுச் சந்தையின் கூரையைக் கண்ணாலும் காண முடியவில்லை. கிராமங்களும், ககரைப் போல பார்ப்பதற்கு கருமமாக அழிந்து இருந்தன. கோர சோகக் காட்சிகளையே எம் கண்கள் விருந்துண்ண வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டது.

மன்னார் நகரத்திலிருந்து, தலைமன்னார் பத்தொன்பதரை மைல் தூரத்தில் உள்ளது. இங்குதான் நாம் தங்கியிருந்தோம். அரிசி சீனி முதலிய உணவுப் பொருட்களையே கண்ணால் காண முடியாத நிலை ஏற்பட்டிருந்த நேரத்தில் சோற்றையோ அல்லது பலகாரத்தையோ காப உண்ண முடியும் என்று நம்பிக்கை செய்ததில்லை. காலையில் இடியப்ப பலகாரத்தை வீடு அம்மணியார் அன்புடன் பரிமாறத் தொடங்கியதும் நாம் திகைத்து விட்டோம். சூறுவளியாரும் கடலாரும் சேர்ந்து விளையாடு முன்னரே தாம் அரிசி மாவைத் தயாரித்து வைத்திருந்ததாக சிரித்துக் கொண்டே "வேண்டாம், வேண்டாம்" என்று கூறியும் கேளாதவராய் எங்கள் வயிற்றை நிறைய வைத்தார். தமிழ் பண்பாட்டின் சிகரமாக விளங்கும் அந்த அம்மணி. தாயகமான யாழ்ப்பாணத்தைப் பற்றி மிக அக்கறையுடன் விசாரித்தார் அந்தத்தாய்

நிறைந்த வயிறுடன் காலை எட்டரை மணியளவில் 'பியர்' புகையிரத நிலையத்தை நோக்கி காலைக் கதிரவனின் பொற்கிரணங்களையும் மேனியில் வாங்கிக் கொண்டு நடந்தோம். தலைமன்னார் பொலிஸ் நிலையத்தைத் தாண்டியதும் ஒரு ஒழுங்கை வீதியிலும், பக்கத்திலே உள்ள கட்டடத்திலே சிறு கூட்டத்தையும் கண்டோம்; அண்மையில் போது முன்னர் எம்மிடம் தெரிவித்தது போல கொழும்பு விவேகானந்த சபையார் துணிமணிகளையும், அரிசி சீனி தீப்பெட்டி கறிவகைகளையும் தாமே விநியோகித்துக் கொண்டிருப்பதை காண முடிந்தது. சபையின் உதவிப் பொதுக் காரியதரிசி திரு. ஏ. இராஜரத்தினம் தலைமையில் மிகவும் உற்சாகத்துடன் தாமே பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்வையிட்டு 8 லொறிகளில் கொழும்பிலிருந்து கொண்டு வந்த உணவு, உடை முதலிய பொருட்களை பாரபட்சமில்லாது எல்லோரையும் சமமாக மதித்து சிறந்த முறையில் உதவி செய்த விவேகானந்தசபைத் தொண்டர் சபையினர் பாராட்டப்பட வேண்டியவர்கள். வெறும் பெயருக்கும் புகழுக்குமாக இயங்கும் சங்கங்களைவிட இது போன்ற சங்கங்களே தமிழர் மத்தியில் மிகவும் வேண்டற்பாலனவாகும், முதல் நாள் திரு. இராசரத்தினத்தை சந்தித்தபோது கொழும்பிலுள்ள வர்த்தகர்கள் பெருவிருப்பத்துடன் முன்வந்து நிதியுதவியும், பொருள் உதவியும் செய்ததாகவும், திரு. நீதிராசா, திரு சின்னத்துரை போன்ற வர்த்தகர்கள் சாமான்களை மன்னாருக்கு ஏற்றிவர லொறிகளை இலவசமாக அளித்ததாகவும் பூரிப்புடன் தெரிவித்தார். முஸ்லீம்களும் மன்னார் மாவட்டத்தில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பெருஞ் சேவை செய்தனர்.

கொழும்பு விவேகானந்த சபையினர் பொருட்கள் விநியோகம் செய்து கொண்டிருந்த இடத்தில் ஒருவர் அல்ல ஆறு பொலிசார் வாசலிலும் இரு பொலிசார் அந்தக் கட்டடத்தினுள்ளும் காவல் புரிந்து கொண்டிருந்தனர். ஆம்! அது தான் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களை கைதுசெய்து வைக்கும் "குவாரன்டைன்" தடுப்பு முகாம் முகாமின் கட்டடங்களில் கூரைகளைக் காணவில்லை. கடற்கரை வெய்யில் என்றால் எப்படிச் சுட்டெரிக்கும் என்று சொல்லித் தெரிவதில்லை, சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக அவர்கள் அந்தச் சுட்டெரிக்கும் வெய்யிலிலே வாடி வதங்கிக் கொண்டிருந்தனர். "பிறந்த தாய்நாட்டை விட்டு வந்தவர்கள் இத்தனையும் அனுபவித்துத்தான் ஆகவேண்டும்" என்றார் எனனுடன் வந்த நண்பர். காசு வாங்கு "கண்டக்டர்கள்" செய்த சொறுமையால்தான் அவர்கள் இப்படியெல்லாம் துன்பப்படுகிறார்கள் என்று கூறியதும் அதை ஒப்புக் கொண்டார் அவர். பல ஆண்டுகளாக மன்னார் மாவட்டத்தில் வசித்து வந்தும் கூப்பன் இல்லை என்ற காரணத்தினால் எத்தனையோ இந்திய வம்சாவளியினர் கூப்பன் அரிசியும் இல்லாமல் தக்க உதவியும் இல்லாமல் பட்டினியால் தவிக்கிறார்கள் என்று முன்னர் ஒரு இடத்தில் அறிந்து கொண்டோம். அவர்கள்பாடு அப்படியாயின், சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் என்று

(6ம் பக்கம் பார்க்க)

### ஐயாறன் எழுதுவது

நேற்று காலை ஓர் அன்பர் சிதம்பரத்திலிருந்து திருவாதிரை தரிசன விபூதிப் பிரசாதம் கொண்டுவந்தார். சூறுவளியால் அங்கு சிக்குண்டு முடிவில் காமராஜரின்—சென்னை அரசாங்கத்தின் — தயவால் தாமும் தன் உறவினரும் விமானமூலம் இலங்கை வந்து சேர்ந்த ருசியான கதையைச் சொன்னார்

கொழும்பிலிருந்து சென்னைக்கு ரிட்டன் டிக்கெட் எடுத்துச் சென்றனராம் இருவரும். ஆளுக்கு ரு 150 எடுத்துச் செல்ல (ஐம்பதாம் திரைகளு!) நமது காருண்ய அரசாங்கம் அனுமதித்திருந்தது. சிதம்பரம், சீர்காழி, தர்மபுரம், சென்னை முதலிய இடங்களுக்குச் சென்றதில் அந்தப் பணம் அநேகமாகக் கரைந்துவிட்டது. இச் சமயத்தில் சூறுவளி வீசி பாம்பன் பாலத்தை உடைத்துவிட்டதால், இலங்கைக்கு எப்படித் திரும்புவதென்று தெரியவில்லை. சென்னையிலுள்ள இலங்கை ஹைகமிஷன் காரியாலய அதிகாரியைக்கண்டு, இங்கு வேலையை ஒப்புக் கொள்ள வேண்டுமென்றும் விமானமூலம் அனுப்பிவைக்குமாறும் கேட்டதற்கு அவர் என்ன சொன்னாராம் தெரியுமா?

இலங்கையிலுள்ள உறவினருக்கு டெலிபோன்பேசி அங்கு ஏர்சிலோன் காரியாலயத்தில விமானக் கட்டணமான ரூ. 120 செலுத்தி, அந்தத் தகவலைத் தந்தமூலம், சென்னையிலுள்ள ஹைகமிஷன் காரியாலயத்துக்குத் தெரிவிக்கச் செய்தால், தாம் அவரை (விமானத்தில் இடமிருக்கும் பொழுது) அனுப்பிவைக்க சிபார்சு செய்யலாமென்று தெரிவித்தாராம்!

* * *

என்னசெய்வது? கையிலோ ஒருசில ரூபாய்தான் மிச்சம். வேறுவிதயின்றி சென்னையிலே டெலிபோன் காரியாலயத்துக்குச் சென்று இலங்கைக்கு டெலிபோன் 'புக்'செய்துவிட்டார். இடையிலே திடீரென ஏதோ எண்ணம் தோன்றியது. உடனே காமராஜருக்கு டெலிபோன் செய்தாராம். அவரது காரியதரிசி அன்புடன் பேசி, மாம்பலத்திலுள்ள பங்களாவுக்கு வரச்சொல்லவே, இருவரும் அங்கு சென்றனர். அவர் வீட்டுமுன் எப்போதும் நீண்ட 'கியூ' வரிசை நிற்கும். இலங்கையிலிருந்து வந்த இருவரையும் பார்த்ததும், உடன் அவர்களை அழைத்து எல்லா விபரங்களையும் கவனமாகக்கேட்டு, ஆறுதல் கூறி மறுநாள் முதல் மந்திரி காரியாலயத்துக்கு வரும்படி தெரிவித்தார்.

மறுநாள் காலை சென்னை முதல் மந்திரி காரியாலயத்துக்குச் சென்றதும், அங்கிருந்த நிரந்தரக் காரியதரிசி, இவ்விருவரையும் கொழும்புக்கு சென்னை அரசாங்கத்தின் செலவில் இலவசமாக விமானத்தில் அனுப்பிவைக்க ஏற்பாடு செய்தாராம். பணம் கட்டினால் கூட, விமானத்தில் இம்மாதம் 25-ந் திகதி வரை இடமில்லையென்றும், சென்னை அரசாங்கம் விசேஷ ஏற்பாடு செய்ததால், தான்கள் இருவரும் விமானமூலம் உடன் கொழும்புவர முடிந்ததென்றும், காமராஜர் உண்மையில் மக்கள் தலைவரென்றும், அவரை "மகாராஜன்" என்று மக்களெல்லாம் வாழ்த்துவது மிகவும் பொருத்தமென்றும், அந்த அன்பர் நன்றியுடனும் மகிழ்ச்சியுடனும் தெரிவித்தார்.

* * *

கையிலே காசில்லாமல், இந்தியாவிலே சூறுவளியால் இன்னும் எவ்வளவு இலங்கையர் சிக்கித் தவிக்கிறார்களோ! இந்த ஆபத்தில் அவர்களுக்குக் கூடுமான உதவிகளை நமது ஹைகமிஷன் செய்ய

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

வேண்டாமா? வெட்கம்! வெட்கம்! சென்னை அரசாங்கத்தின் இந்த முன்மாதிரியைக் கண்டபின்னாவது பிரதமர் சிறிமா இதைப்பற்றி கவனிப்பாரா? சட்டவிரோதக் குடியேற்றக்காரரை விமான மூலம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்க முற்பட்டுள்ள நமது அரசாங்கம் சென்னையிலே புயலால் சிக்கி, உணவுக்கும் தவிக்கும் நம்மவர்களை இங்கு விமான மூலம் கொண்டு சேர்க்க உடன் நடவடிக்கை எடுக்குமா?

* * *

நீருகி நீறுமிழும் நெருப்புமாகி நினைவாகி நினைவினிய மலையான் மங்கை, கூறுகிக் கூற்றுகிக் கோளுமாகிக் குணமாகிக் குறையாத உவகைக் கண்ணீர், ஆறுத ஆனந்தத் தடியார் செய்த அநாசாரம் பொறுத்தாளி அவர் மேலென்றன், நீருக பெருமானைத் திருமாற்பேற்றெஞ் செம்பவளக் குன்றினைச் சென்றடைந்தேன் நானே.

— அப்பர் சுவாமிகள்,

# "மலேசியாவில் ஐ.நா. படைகள் நிறுத்தப்பட வேண்டும்"

## உதவிப் பிரதமர் துன்ரஸாக் வேண்டுகோள்

### பிரிட்டிஷ் குண்டுவீச்சு விமானங்கள் நெருக்கடியை எதிர்நோக்கத்தயார்

நியூயோர்க், ஜன. 6

மலேஸியாவில் அமைதியைப் பாதுகாக்க ஐ. நா. அமைதிப் படைகள் நிறுத்தப்பட வேண்டும் என உதவிப் பிரதமர் துன் அப்துல் ரஸாக் தெரிவித்திருக்கிறார்.

அதே சமயம் இந்தோனேஷியாவின் ஆக்கிரமிப்பு பற்றி பாதுகாப்பு சபையில் மலேஸியப் பிரதிநிதி திரு. ரமணி குறிப்பிட்டார். மலேஸியாவில் இந்தோனேஷியர்கள் 200-சசுத்தமான சம்பவங்களில் இதுவரை சம்பந்தப்பட்டிருந்தார்கள் என அவர் கூறினர்.

இச்சம்பவங்களின் விளைவாக இதுவரை 100 மலேஸியர்கள் கொல்லப்பட்டிருப்பதாயும், 600 இந்தோனேஷியர் கொல்லப்பட்டிருப்பதாயும் திரு. ரமணி குறிப்பிட்டார்.

இதற்கிடையில் இந்தோனேஷிய கெடுபிடி காரணமாக மேலும் பல பிரிட்டிஷ் துருப்புகள் மலேஸியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன, ஏற்கெனவே மலேஸியாவிலுள்ள பிரிட்டிஷ் விமான அணிக்கு உதவியாக, சக்தி வாய்ந்த "வி" வெடிகுண்டு அணிகள் தயாராக வைக்கப்பட்டிருக்கின்றன.

பிரிட்டன் மலேஸியாவுக்கு துருப்புக்களை அனுப்பி வருவது குறித்து ரஷ்யா கண்டனம் தெரிவித்திருக்கிறது இந்தச் செயல் தென் கிழக்காசியாவில் நிலைமையை மோசமாக்கும் என டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

பிரிட்டிஷ் விமானந் தாங்கிக் கப்பல் மலேஸியாவுக்கு வந்து கொண்டிருக்கிறது.

# ஏமனில் நெருக்கடி நிலை; பிரதமர் ராஜினமா

சனு, ஜன. 6

ஏமனில் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. ரிபப்ளிகன் பிரிவைச் சேர்ந்த பிரதமர் ஜெபி ராஜினமாச் செய்துவிட்டார் என்றும், உதவி ஜனதிபதி புதிய பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கிறர் என்றும் சான ரேடியோ அறிவித்தது.

முன்னள் மந்திரிகள் பலர் விசாரணை செய்யப்படவிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது. கெய்ரோ சென்றிருந்த ஜனதிபதி ஸலல் நாடு திரும்பியதும் புதிய நிலைமை உருவாயிற்று.

ஜனதிபதி சலாலை பதவியிலிருந்து அகற்றவேண்டும் என முன்பு அங்கு கூக்குரல் ஏற்பட்டிருந்தது.

# டில்லியில் 3வது சர்வதேச திரைப்பட விழா

## வெள்ளிக்கிழமை ஆரம்பம்

புதுடில்லி, ஜன. 6

3-வது சர்வதேச திரைப்பட விழாவை வருகிற வெள்ளிக்கிழமை ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் இங்கு துவக்கிவைப்பார். இது போட்டி முறை விழாவாக இருக்கும்

1952, 1961 ஆகிய இரு ஆண்டுகளில் இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாக்கள் போட்டி முறை விழாவையல்ல.

இப்போது 50 நாடுகளுக்கு மேல் இந்தப் போட்டியில் கலந்துகொள்கின்றன. 1963-ம் ஆண்டுக்குப் பின் தயாரிக்கப்பட்டவையும், இதுவரை எந்தப் போட்டியிலும் பங்குபற்றுததுமான படங்களே இதில் கலந்துகொள்ள முடியும். 20 கதைப்படங்களும், 29 வரலாற்றுப்படங்களும் விழாவில் காட்டப்படும்,

வெற்றிபெறும் படங்களுக்கு தங்கமயில் பரிசாக வழங்கப்படும்.

விழா முடிந்தபின் பம்பாய், சென்னை கல்கத்தா ஆகிய இடங்களில் திரைப்பட வாரங்கள் நடத்தப்படும்.

## ஜோன்ஸன் அழைப்பு

மாஸ்கோ, ஜன. 6

அமெரிக்கா வரும்படி திரு. ஜோன்ஸன் ரஷ்யத் தலைவர்களுக்கு விடுத்த அழைப்பு ரஷ்ய பத்திரிகைகளில் முக்கியமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

## திருப்பதி தேவஸ்தானம்

சென்னை ஜன. 6

ராமேஸ்வரம் ஆ. தி. களுக்கு திருப்பதி தேவஸ்தானம் 10,000 ரூபாயும், 200 சேலைகளும் வழங்கியிருக்கிறது

## முன்னுள் எம். பி.யின் குற்றச்சாட்டு

மறவில, புதன்

"சுதந்திரக்கட்சியின் தேர்தல் விஷயத்தில் சீன - ரஷ்யா தூதர் காரியாலயங்கள் பண உதவி புரிகின்றன மார்க்ஸிய வாதிகளின் ஆதரவுள்ள பத்திரிகைகள் இன்று யு. என். பி. பற்றி பல சிருஷ்டிக்கப்பட்ட கதைகளை எழுதி மக்கள் மத்தியிலே விநியோகம் செய்கின்றன. இதனுல் உண்மை நிலை தெரியாத வாக்காளரைக்கொண்டு இலங்கையை மற்றுமோர் சிவப்புக் கோட்டையாகக் பார்க்கின்றனர்" என்று முன்னாள் குளியாப்பிட்டி எம். பி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரிபகொல மரவிலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

# ஐ.நா.இந்தோனேஷியபிரதிநிதிகள் தாயகம் புறப்பட்டனர்

## திரும்பிவரமாட்டார்களாம்

நியூயோர்க், ஜன. 6

ஐ நாவிலுள்ள இந்தோனேஷிய நிரந்தரப் பிரதிநிதி திரு. பாலர் தவிர, தூதுகோஷ்டியின் இதர அங்கத்தினர்கள் அனைவரும் நியூயோர்க்கை விட்டுத் தாயகம் புறப்பட்டனர்.

அவர்கள் மீண்டும் ஐ நா திரும்பி வரமாட்டார்கள் என நிரந்தரப் பிரதிநிதி தெரிவித்தார். எனினும் ஐ. நா. விலிருந்து விலகுவதாக இந்தோனேஷியா உத்தியோக பூர்வமாக இன்னும் அறிவிக்கவில்லை எனக் கூறப்பட்டது.

ஐ. நா. விலிருந்து விலக வேண்டாமென ஜப்பானிய பிரதமர் திரு. ஸாட்டோ, டாக்டர் சுகர்னேவுக்குச் சொந்த முறையில் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

மலேஸியாவை பாதுகாப்பு சபையில் அனுமதித்தது காரணமாக இந்தோனேஷியா புதிய நிலைமையை உண்டுபண்ணியிருக்கிறது.

## அயூபுக்கு வாழ்த்துக்கள்

ராவல்பிண்டி, ஜன. 6

பீல்ட் மார்ஷல் அயூப்கான் ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதைப் பாராட்டி பிரிட்டிஷ் பிரதமர் திரு வில்சன், மேற்கு ஜெர்மன் பிரதமர் டாக்டர் எர்ஹார்ட் முதலியோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருக்கின்றனர்,

# கராச்சியில் மீண்டும் பொலிஸ்துப்பாக்கி பிரயோகம்

## இதுவரை 13 பேர் பலி

கராச்சி, ஜன, 6

கராச்சியில் நேற்று மீண்டும் அரசியல்கட்சி ஆதரவாளர்களுக்கிடையே நடைபெற்ற கைகலப்பைக் கலைக்க பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் கொல்லப்பட்டனர். 12 பேர் காயமடைந்தனர்

கராச்சியில் பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இதுவரை பலியானவர் தொகை 13 ஆகும்.

75க்கு மேலானேர் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

கொள்ளை, தீயிடல் ஆகிய சம்பவங்களும் நேற்று நடைபெற்றன. ஆளும்கட்சி ஆதரவாளர்கள் பல இடங்களுக்கு தீ மூட்டியதாய அறிவிக்கப்படுகிறது. ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிசார்மீதும் சுட்டனர்.

ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுல்நடத்தப்பட்டு வருகிறது. நேற்றிரவு துருப்புகளும் பொலிசாரும் ரோந்து சுற்றினர்

## மெரீனர்-4

### பத்தரை கோடி மைல் சென்றது

வாஷிங்டன், ஜன 6

செவ்வாய்க்கிரகத்துக்கு அனுப்பப்பட்ட 'மெரீனர்-4' என்ற அமெரிக்க கிரகம் இதுவரை 10 கோடியே 30 லட்சம் மைல் பிரயாணம் செய்திருக்கிறது. கடந்த நவம்பர் 28ம் திகதி இது அனுப்பப்பட்டது. வருகிற ஜூலை மாதத்தில் இது இலக்கை அடையும் என அறிவிக்கப்பட்டது.

## ஜாகர்த்தா- பீகிங் விமான சேவை

பீகிங், ஜன 6

சீனவுக்கும் இந்தோனேஷியாவுக்குமிடையே நேரடி விமான சேவை ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று.

## ஸைகோனில்

ஸைகோன், ஜன. 6

ஸைகோனில் நேற்று மீண்டும் பல அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன இதற்கிடையில் 24 மணி நேரம் உண்ணாவிரதமிருந்த 500 பிக்குகளும், பிக்குனிகளும் உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டிருக்கின்றனர்.

## 69-வது காங்கிரஸ்

துர்க்காபூர், ஜன. 6

துர்க்காபூரில் 69-வது காங்கிரஸ் மகாசபை ஆரம்பமாகவிருக்கிறது. இன்று காரியக் கமிட்டி அங்கு கூடுகிறது.

## ஹிந்தியில் கீதாஞ்சலி

புதுடில்லி, ஜன. 6

ரவிந்திரநாத தாகூரின் கீதாஞ்சலி, டேட்ரிக்கார்டில் ஹிந்தி மொழியில் பதிவுசெய்யப்படுகிறது.

## 5 வர்த்தகர்கள் கைது

புதுடில்லி, ஜன. 6

ராஜஸ்தானில் உணவுப் பதுக்கல் நடத்திய 5 வர்த்தகர்கள் கைதுசெய்யப்பட்டனர். 10,000 மூட்டை சோளம் பிடிபட்டது.

## யூகோ. தூதர்கள் வாபஸ்

பெல்கிரேட், ஜன 6

லியப்போல்ட்வில்லிலுள்ள தமது தூதரக ஊழியர்களை யூகோஸ்லேவியா வாபஸ் பெற்றிருக்கிறது.

## இங்கிலாந்து - தெ. ஆபிரிக்கா

கேப்டவுன், ஜன. 6

இங்கிலாந்துக்கும், தென் ஆபிரிக்காவுக்குமிடையே இங்கு நடைபெறும் 2-வது கிரிக்கெட்போட்டியில், தென்னுபிரிக்கா 2 விக்கட் நஷ்டத்திற்கு 53 ரன்கள் எடுத்தது.

முதல் இன்னிங்ஸில் தென்னுபிரிக்கா 7 விக்கெட் நஷ்டத்திற்கு 501 ரன்களும், இங்கிலாந்து 44 ரன்களும் எடுத்தன. இன்று ஆட்டத்தின் கடைசி நாள்.

# "தென்நாட்டவர்கள் ஈஸ்வர பக்தி மிக்கவர்கள்"

## காஞ்சி ஆசார்யாள் உரை

காஞ்சிபுரம், ஜன. 6

"தென்னட்டவர்கள் ஈசுவர பக்தி மிகுந்தவர்கள். அதனுல்தான் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவு தென்னட்டில் வானளாவிய கோபுரங்கள் நிறைந்திருக்கின்றன. நாம் சிரத்தையுடன் ஈஸ்வரனைப் போற்றினுல் எல்லோரும் போற்றிக் கொண்டாடுவார்கள்" என காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் இங்கு நடைபெற்ற திருப்பாவை- திருவெம்பாவை மகாநாட்டில் கூறினர்,

சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம், திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், திரு. ஏ. ஜி. வெங்கடாச்சாரியார், திரு. கி. வா. ஜகந்நாதன் போன்றவர்கள் சொற்பொழிவாற்றினர்.

## சிறுபான்மை யோருக்கு வேலைவாய்ப்பு

### ஜோன்சனின் திட்டம் வெற்றி

வாஷிங்டன், ஜன. 6

ஜனதிபதி ஜோன்ஸன் நியமித்துள்ள சம வேலைவாய்ப்பு கமிட்டியின் நிர்வாகத் தலைவர் திரு ஹேபோர்ட் ரெயிலர் அமெரிக்காவில் கடந்த பன்னிரண்டு மாதங்களில் வெள்ளையரல்லாதோர் முன்னைவிட பன்னிரண்டு சத விகிதம் அதிகமாக வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர் எனத்தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை தொழிலாளர்களிடத்து தொழிற் சமூகங்கள் காட்டும் அனுதாபம் போற்றுதற்குரியதொன்று இதனுல் வேலைவாய்ப்புகளும், அதிகரித்திருக்கின்றனதென்றும் திரு ரெயிலர் கூறியுள்ளார்

## நிலுவை வரி குறித்து பேட்டி

சுழிபுரம், புதன்

சுழிபுரம் கிராமசபையினர் 1962-ம் ஆண்டு தொடக்கமான சோலைவரியை அறவிடுவதற்கு முயன்றுள்ளார்கள். 1962-ம் ஆண்டுக்குரிய வரியை அவ்வாண்டில் அறவிட நடவடிக்கை எடுக்காது 1964-ம் ஆண்டில் எடுக்கமுற்பட்டதால் பொது மக்கள் மூன்று ஆண்டுகளுக்குரிய பணத்தைக் கட்டமுடியாது திண்டாடுகின்றார்கள். வரி மதிப்பில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகவும் இவற்றை நீக்கி 1965-ம் ஆண்டு தொடக்கம் வரியை எடுக்குமாறும் கோரி திரு. ஏ. தையல்பாகர் தலைமையில் ஒரு கோஷ்டியினர் சுழிபுரம் கிராமசபை அலுவலகத்தில் சந்தித்து சபைத் தலைவர் திரு. கந்தசாமியைக் கேட்டுக்கொண்டனர்.

## கம்யூனிஸ்ட்கட்சி அபேட்சகர்

உடுப்பிட்டி, புதன்

எதிர்வரும் பொதுத் தேர்தலில்கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் உடுப்பிட்டித் தொகுதியில் கெல்லியடியைச் சேர்ந்த பிரபல கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. குமாரசாமி போட்டியிடவிருக்கிறர்.

# மாவட்ட அரசாங்க அதிபர்களை கலந்தாலோசிக்குக

## பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் ஸ்தாபனங்களுக்கு அரசாங்கம் வேண்டுகோள்

கொழும்பு, புதன்

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தாமாகவே உணவு உடை முதலிய பொருட்களை விநியோகிக்கும் ஸ்தாபனங்களையும் சங்கங்களையும் முதலில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களை கலந்தாலோசிக்குமாறு அரசாங்கம் கோரியுள்ளது. பல ஸ்தாபனங்களும் சங்கங்களும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்வந்துள்ளதால் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாலேயே இவ்விதம் அரசாங்கம் கோரியிருக்கிறது.

சில இடங்களில் அரசாங்கம், பிற ஸ்தாபனங்கள் ஆகியவை இரண்டு, மூன்று தடவைகள் உதவியளித்தும் சில இடங்களில் உதவி எதுவும் அளிக்கப்படாமலும் இருப்பதால் இதனால் உயர்தர அதிகாரிகள் பாதிக்கப்பட்ட பகுதிகள் எல்லாவற்றுக்கும் சமமான முறையில் நிவாரணப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவதற்கு கவனம் செலுத்தி வருகிறார்கள்.

திரு. சிறில் சமரநாயக்கா, ரூபசிங்கா ஜெயசிங்கா கோ ஆகிய இரு ஸ்தாபனங்கள் உதவிப் பொருட்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஏற்றிச் செல்ல தங்கள் லொறிகளை கட்டணம் எதுவுமில்லாமல் சமூகசேவைப் பகுதிக்கு உதவியுள்ளனர் வேறு ஸ்தாபனங்களும் உதவ முடியுமானால் உதவுமாறு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

### மீனவர்களுக்கு உதவி

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இயன்ற உதவியளிக்குமாறு உணவு, மீன்பிடி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மீன்பிடி இலாகா டைரக்டருக்கு உத்தரவிட்டுள்ளார். மீன்பிடி இயந்திரப்படகுகளுக்கும், உபகரணங்களுக்கும் ஏற்பட்ட சேதம் குறித்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறும் மந்திரி டைரக்டருக்கு உத்தரவிட்டுள்ளார். டைரக்டரின் அறிக்கையைப் பரிசீலனை செய்த பின்னர் மந்திரி நிவாரணம் எவ்விதம் அமைய வேண்டும் என்பதுபற்றி மந்திரி தீர்மானிப்பார்.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு, உபகரணங்கள், கடன் வசதிகள் அளித்தும் மீன்பிடி கார்ப்பரேஷன் உதவும் என அறியப்படுகிறது.

### பதவியாவில்

உணவு, உடை வகைகள் லொறி லொறியாக காளாத்தம் பதவியாவுக்கு வந்து சேருகின்றன. ஆனால் அந்தப் பொருட்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைக்காமல் போய்விடுகிறது. ஏனெனில் தனிப்பட்ட ஸ்தாபனங்களின் லொறிகள் பதவியாவின் முக்கிய சந்திபால் தாண்டி செல்வதற்கு முன்னர் குறையாடுபவர்கள் லொறிக்காரரிடம் பாதிக்கப்பட்டவர்கள் எனக் கூறிக்கொண்டு தட்டிப்பறிக்கின்றனராம்.

# 'மூளைக்குள் இரண்டு சன்னங்கள் இருந்தன'

மாவிட்டபுரம், செவ்வாய்

கட்டுவன் மேற்கைச் சேர்ந்த குசலக்கடடுவனில் சென்ற மாதம் 20-ந் திகதி இரவு ஆறுமுகரைச் சேர்ந்த கன்னியன் நவநீதன் என்பவர் கட்டுக் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக வேலுப்பிள்ளை தம்பிராசா, வல்லிபுரம், வேலாயுதம், யோகரத்தினம் எனறழைக்கப்படும் இராமு யோகராசா ஆகிய மூவரும் நேற்று மல்லாகம் நீதிபதி திரு. எப். எச். அத்துறுபால முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்கள் மூவரும் சென்ற மார்கழி மாதம் 20-ந் திகதி கன்னியன் நவநீதனைச் சுட்டுக் கொலை செய்ததாக சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மூர்த்தி குற்றப் பத்திரிகையை நீதிபதிமுன் தாக்கல் செய்தார். கன்னியன் நவநீதனின் பிரேதத்தைப் பரிசோதனை செய்த காங்கேசன் துறை உதவி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வீரவாகு சண்முகநாதன் சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது:

காலஞ்சென்றவரின் தலையிலும், நெற்றியிலும் ஐந்து காயங்கள் காணப்பட்டன. தலையில் காணப்பட்ட நான்கு காயங்களும் சூட்டுக்காயங்கள். அதில் மூன்றும் துவக்குச் சன்னங்களால் ஏற்பட்டவை. நெற்றியில் உள்ள காயம் எப்படி ஏற்பட்டதென்று தெரியாது. ஆனால் விழுந்தும் வந்திருக்கக் கூடும். தலையில் ஏற்பட்ட காயங்களினால் மூளை சிதறிப் போயிருந்தது. மூளைக்குள் இருந்து இரண்டு சன்னங்களைக் கண்டு எடுத்தேன்.

காலஞ்சென்றவர் சுடப்பட்டவுடன் இறந்விட்டாரா என்று என்னால் கூற இயலாது. இவ்வளவு தூரத்தில் இருந்து சுடப்பட்டது என்றும்கூற இயலாது. அதை அரசாங்க பரிசோதகர் தான் கூறமுடியும்.

சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மூர்த்தி சாட்சியமளிக்கையில் பொலிஸ் விசாரணையின்போது கண்டு எடுக்கப்பட்ட இரண்டு வெற்றுக்கோட்டாக்களையும், ஏழுவேட்டிங்கையும் டாக்டர் பிரேதபரிசோதனையின் போது கண்டு எடுத்த இரண்டு சன்னங்களையும் அரசாங்க பரிசோதகரின் பரிசோதனைக்கு அனுப்ப உத்தரவிடும்படியும், ஏழுவேட்டிங்கும் இரண்டு குண்டுகளும் மேற்கூறிய இரண்டு வெற்றுக் கோட்டாவிற்குள்ளிருந்துதான் வந்ததா என்பதைப் பற்றியும், சுட்டவர்கள் எவ்வளவு தூரத்தில் நின்று என்ன இலக்கில் சுட்டார்கள் என்பதைப் பற்றியும் அறிக்கை சமர்ப்பிக்கும்படி அரசாங்க பரிசோதகருக்கு உத்தரவிடும்படியும் விண்ணப்பித்தார். விண்ணப்பத்தை ஏற்று நீதிபதி மேற்கூறிய பொருள்களை அரசாங்க பரிசோதகருக்கு அனுப்பி அறிக்கை பெறும்படி உத்தரவிட்டு மேல்விசாரணையை இம்மாதம் 12-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

எதிரிகள் சார்பில் திரு. ஆர். யே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானார். இன்ஸ்பெக்டர் திரு மூர்த்தி வழக்கை நடத்தினார்.

## டைகர் ஸ்போர்ட்ஸ் கிளப் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

"டைகர் ஸ்போர்ட்ஸ் கிளப் வீரர்கள் தாங்கள் முதல் தடவையாகக் கலந்துகொண்ட இரு உதைபந்தாட்டப் போட்டியிலும் வெற்றியீட்டினர். இச்சமூகத்தைச் சேர்ந்த இரு கோஷ்டிகளில் ஒன்று வண்ணை பண்ணையைச் சேர்ந்த ஸ்டார் கழகத்தை 1-0 கோலினாலும், மறு கோஷ்டி அரியாலையைச் சேர்ந்த சில்வர் ஸ்போர்ட்ஸ் கழகத்தை 1-2 கோல்களாலும் தோற்கடித்தன.

## இளைஞர் சமூக நிலையக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

கொழும்புத்துறை மேற்கு சூரியோதய இளைஞர் சமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் சென்ற 1-ம் திகதி முகாந்திரம் எஸ். ஏ. வைத்திலிங்கம் ஜே. பி. தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் புதிய உத்தியோகத்தர் தெரிவு முக்கிய நிகழ்ச்சியாக இடம்பெற்றது. பின்வருவோர் 1965-ன் புதிய உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்கள் டாக்டர் எஸ். ஏ. வெற்றிவேலு, டாக்டர் வி. நடராஜா, உபபோஷகர்கள் திருவாளர்கள் எஸ். செல்வராஜா, பா. பா. சிவானந்தன். கே. ராஜசிங்கம், தலைவர் முகாந்திரம் எஸ். ஏ. வைத்திலிங்கம் ஜே. பி. உபதலைவர் திரு. பி. கதிரவேலாயுதபிள்ளை, செயலாளர் பொன்னுகுமாரசூரியர், உதவிச் செயலாளர் திரு. டி. எம். செல்லநாயகம், பொருளாளர் திரு ஆர். நடராஜா, உதவிபொருளாளர் திரு. எஸ். பூவேந்திரன், நூல்நிலையப் பொறுப்பாளர் திரு. யோ. சிவகுமாரன், உதவி நூல்நிலையப்பொறுப்பாளர்கள் திருவாளர்கள் பி. சி. விக்னராஜா, எஸ் ஸ்ரீஸ்கந்தா, தமிழ்ப் பகுதி ஆசிரியர் திரு. எஸ். செந்திநாதன், ஆங்கிலப் பகுதி ஆசிரியர்கள் திருவாளர்கள் டி. எம். செல்வநாயகம், எஸ். பி. ராஜரத்தினம் ஒரு உள்நிர்வாகக் கமிட்டியும் 7 அங்கத்தினரைக் கொண்ட நிர்வாகக் கமிட்டியும் தெரிவுசெய்யப்பட்டது.

## பிக்குவின் அபிப்பிராயம்

குருநாகலை, புதன்

'எந்த ஒரு துறையிலும் பெண்களுக்கு முதலிடம் கொடுக்கக்கூடாதென புத்தபிரான் உபதேசித்துள்ளார். இதனை நாம் பின்பற்றவேண்டும்' என வண. பன்னதாசி தேரோ இங்கு நடைபெற்ற பிக்குகள் மகாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மார்க்ஸிஸ வாதிகளை எதிர்ப்பதில் பிக்குகளெல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று வண. சீலானந்த பிக்குத் தேரோ பேசுகையில் கூறினார்.

## சீமெந்து கார்ப்பரேஷன் சீமெந்து இறக்குமதி

கொழும்பு, புதன்

சீமெந்துக் கார்ப்பரேஷன் 2 லட்சம் தொன் சீமெந்தை இந்த வருடத்தில் இறக்குமதி செய்யவிருப்பதாக அறியப்படுகிறது.

ருமேனியா, போலந்து ஆகிய சோஷலிஸ நாடுகளிலிருந்து அதிகமான அளவு சீமெந்து இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

## பட்டினசபை தலைவர் தெரிவு

யாழ்ப்பாணம், புதன்

சங்கானைப் பட்டினசபையின் தலைவர் தெரிவு இந்த மாதம் 18-ந் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும் என்று ஸ்தல ஸ்தாபன அதிகாரி தெரிவித்துள்ளார். இதுபற்றி சங்கானைப் பட்டினசபையின் ஏழு வட்டார அங்கத்தவர்களுக்கும் ஸ்தலஸ்தாபன அதிகாரி பதிவுத் தபால் மூலம் அறிவித்துள்ளார்.

# "சத்தியாக்கிரக நிதி போராட்டத்துக்கே செலவிடப்பட்டது"

## அமிர்தலிங்கம் விளக்கம்

நல்லூர், வியாழன்

"சத்தியாக்கிரக காலத்தில் பொது மக்களால் போராட்ட நிதியாக வழங்கப்பட்ட நிதியில் பெருந்தொகை போராட்டத்திற்கே செலவிடப்பட்டது. போராட்டத்தில் ஓர் அங்கமான மலையகத் தமிழரை ஒற்றுமைப் படுத்துவதற்கான முயற்சிக்கும் இப்பணம் செலவிடப்பட்டுள்ளது." என்று தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

கட்டுவன்-மயிலிட்டி தெற்கு வர்த்தக விநாயகன் தமிழரசு வாலிப முன்னணியின் ஆதரவில் காங்கேசன்துறையில் போட்டியிடும் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை ஆதரிக்குமுகமாக நடைபெற்ற கூட்டத்தில் பேசியபோதே திரு அமிர்தலிங்கம் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

திரு. த. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசியதாவது:

சத்தியாக்கிரகத்தின் போது கோடிக்கணக்கில் பணம் சேர்த்துள்ளதாக சிலர் கூறுகிறார்கள். சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு மக்கள் உதவிய பணம் சத்தியாக்கிரகத் தொண்டர்களின் செலவுகளில் பெரும்பகுதி போய்விட்டது. மலைநாட்டுத் தமிழரை இயக்கரீதியில் ஒன்று படுத்துவதும் போராட்டத்தின் ஓர் அங்கமாக நாம் கருதியதனால் அவர்களை ஒன்று படுத்தும் முயற்சிகளிலும் அப்பணத்தைச் செலவிட்டிருக்கின்றோம். எஞ்சியுள்ள பணம் பாதுகாப்பாக உள்ளது.

தமிழரசுக்கட்சியிடம் எஞ்சியுள்ள இப்போராட்டநிதியைக் கொண்டு சிறு கைத்தொழிலைத்தானும் ஆரம்பிக்கமுடியாது. கைத்தொழிலை ஆரம்பித்து தொழில் ஸ்தாபனமாக மாறுவது அரசியல் கட்சியின் வேலையல்ல. மக்களை தொழில் துறைகளில் ஊக்குவிப்பது தான் அரசியல் கட்சியினால் செய்யக்கூடிய பெரும் தொண்டாகும்.

கடந்த 10 ஆண்டுகளாக தமிழரசுக்கட்சி எதனைச் சாதித்துவிட்டது என்று கேட்பவர்கள் தமது முழு அரசியல் வாழ்விலும் எதனையும் செய்திருக்கவில்லை வடக்கு, கிழக்கு மலையகத் தமிழர்களிடம் காணப்பட்ட வேற்றுமை உணர்வை நீக்கி அவர்களை தமிழர்கள் என்ற நினைவில் ஓரணியில் திரளச்செய்தது தமிழரசுக் கட்சியே. தமிழரசுக் கட்சியின் சாதனையை யாரும் நினைத்திருக்கமுடியாது. நினைத்துப் பார்க்கவும் முடியாது.

அடிமைப்பட்ட ஓர் இனம் கஷ்டமின்றி சுதந்திரம் பெற்றதில்லை. அடி, உதை, சிறை என்பனவற்றுக்கூடாகத்தான் சுதந்திரம் பெற்றுள்ளது.

### செயலில் திறமைசாலிகள் வேண்டும்

அரசியல் வாழ்வில் ஒதுங்கியிருந்தவர்கள் தேர்தல் வந்ததும் மக்கள்முன் வந்திருக்கிறார்கள். திறமைசாலிகளை அனுப்புங்கள் என்று கோஷமிடுபவர்கள் எந்தவகையில் சிறுபான்மை திறமைசாலிகளை அனுப்பும்படி கூறுகிறார்களில்லை. செயல் திறமை மிகுந்த திறமைசாலிகளே வேண்டும்.

அரசியலில் எதிர்காலம்பற்றிச் சொல்பவர்களே திறமைசாலிகள், தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்படப்போகும் எதிர்காலக் கஷ்டத்தை முன்கூட்டி உணர்ந்தது தமிழரசுக் கட்சியே. அரசியல் தீர்க்கதரிசனமும் கொள்கையிலிருந்து வழுவாத தன்மையும் அரசியல்வாதியின் திறமைக்கு அளவு கோலாக இருக்கும். 1948-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ம் திகதி பாராளுமன்றில் பிரஜாவுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது திரு. செல்வநாயகம் 'இன்று இந்தியத் தமிழருக்கு விழும் அடி, நாளை தமிழ் இனத்திற்கும் விழும், என்று தீர்க்கதரிசனமாக உரைத்தார்.

1956-ம் ஆண்டுக்குமுன் சிங்கள மக்கள் தமிழ் மக்களைப் பற்றிக் கொண்டிருந்த அபிப்பிராயம் வேறு. இன்றுள்ள நிலைமை வேறு. 1956 க்கு முன் முதலில் எதனையும் தமிழர் எதிர்ப்பர், பின் அதனை ஆதரிப்பர் என்று எண்ணிய சிங்கள மக்கள் டொனமூர், சோல்பரித் திட்டங்களையும் சிங்கக் கொடியையும் எதிர்த்தவர்கள் பின் அதனை ஆதரித்ததனைக் குறிப்பிட்டனர், ஆனால் 56-ம் ஆண்டுக்குப்பின் இந்தக் கணவை மாற்றிவிட்ட பெருமை தமிழரசுக் கட்சிக்குரியது. இனத்தின் உரிமைகளை வழங்குவதே தமிழர்களின் ஆதரவு பெற உள்ள ஒரே வழியென்பதனை அவர்களுக்கு உணர்த்தினோம். நேர்மை, மானம் என்பனவற்றைக் கைவிடாது கொண்ட லட்சியங்களுக்காகப் போராடுவதே கட்சியின் சிறந்த பண்பாகும்.

தென் இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகளுக்குள் எல்லாம் வேறுபாடுகள் தோன்றிவிட்டன. இலங்கையில் கருத்து வேற்றுமை ஏற்பட்டு பிளவுபடாத ஓர் அரசியல் ஸ்தாபனம் தமிழரசுக் கட்சி என்பதனை அனைவரும் அறிவர். தமிழ் நாட்டில் தமிழிலும் சிங்கள நாட்டில் சிங்களத்திலும் கருமமாற்றும் உரிமையுள்ளனவாக இருக்கவேண்டும். இந்தச் சமத்துவ உரிமைகளுக்காகவே நாம் போராடிவருகிறோம்.

இந்த நாட்டில் மொழிப் பிரச்னையைத் தீர்க்கப்படாத பிரச்னையாக, தீர்க்கப்பட வேண்டிய பிரச்னையாக வைத்துப் போராடுகிறோம். தமிழர்கள் நடத்தும் ஓர் விடுதலை இயக்கத்தில் கலந்துகொண்டு ஒற்றுமையை ஏற்படுத்த அனைவரும் முயலலாம்.

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ. ஜே. வி. செல்வநாயகம் பேசியதாவது:-

தனி நபர்களின் குணநிசயங்களை மனத்தில் வைத்து வாக்களித்தல் கூடாது. இலட்சியங்களை கருத்தில் வைத்தே தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும். 157 பேர் கொண்ட பார்லிமெண்டில் 20 பேர்மட்டுமே சிறுபான்மை இனத்தவரின் பிரதிநிதிகளாக உள்ளனர், இவர்கள் எல்லோரும் ஓர் கட்டுப்பாட்டில் இயங்குபவர்களாகத் தெரிவு செய்யப்படின் எதனையும் சாதிக்க முடியும்.

நமக்கென ஓர் பிரதேசம் இருப்பதனால்தான் நாம் இன்னும் தனி இனமாகச் சிறப்புடன் வாழ முடிகிறது.

எனவே யார் பார்லிமெண்டுக்குப் போனாலும் ஒரே கட்டுப்பாட்டில் அமையக் கூடிய கட்சி இலட்சியங்களைக் கடைப்பிடிக்கக் கூடியவர்களைத் தெரிவு செய்தல் மிகவும் அவசியமாகும்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், உடுவில் முன்னாள் எம் பி. திரு. வி. தர்மலிங்கம், வழக்கறிஞர் க. நடராசா ஆகியோரும் பேசினர்.

## பரீட்சை முடிவுகள் வெளியாகவில்லை

கச்சாய், புதன்

சென்றமாதம் வெளியாகியிருக்கவேண்டிய வட இலங்கை சங்கீத சபையால் நடாத்தப்பட்ட 1964-ம் ஆண்டு சோதனையின் பெறுபேறுகள் இன்னமும் வெளியாகவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

# "தியாகம் செய்யக்கூடிய திறமை சாலிகள் தேவை"

## சாவகச்சேரி தமிழ்க் காங்கிரஸ் கூட்டத்தில் சிவானந்தன்

சாவகச்சேரி, புதன்

'திறமைசாலிகளையல்ல தியாகிகளையே அனுப்பவேண்டும் என்று தமிழரசுக் கட்சியினர் கூறுகின்றனர் ஆனால் நான் கூறுவது தியாகம் செய்யக் கூடிய திறமைசாலிகளை அனுப்பவேண்டும் என்பதே. பட்டாளத்திற்கும் துப்பாக்கிகளும் பயந்து ஓடும் தியாகிகளை அனுப்புவதால் பயனுண்டா? தமிழ் உரிமையைப்பெற என் உயிரையும் தியாகம் செய்வேன் என்று இந்த பகிரங்க கூட்டத்தில் வாக்குறுதியளிக்கிறேன்"

சாவகச்சேரி சந்தை மைதானத்தில் நேற்றிரவு முன்னாள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி உபஅதிபர் திரு எஸ். கே. செல்லையா தலைமையில் நடைபெற்ற தமிழ்காங்கிரஸ் கூட்டத்தில் சாவகச்சேரி தொகுதி தமிழ்காங்கிரஸ் அபேட்சகர் பாரிஸ்டர் திரு. எம். சிவானந்தன் பேசும்போது கூறினர்.

கொடிகாமம் சந்தியிலிருந்து ஆரம்பமான வாலிபர்களின் சைக்கிள் ஊர்வலத்தை தொடர்ந்து, மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவிலிலிருந்து ஆரம்பமான ஊர்வலம், சாவகச்சேரி சந்தை மைதானத்தை வந்தடைந்தது. இந்த ஊர்வலத்தில் பரிஸ்டர் எம். சிவானந்தன், உடுப்பிட்டி முன்னாள் எம். பி. திரு எம். சிவசிதம்பரம், கோப்பாய் தமிழ்காங்கிரஸ் அபேட்சகர் திரு. குணரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

திரு. சிவானந்தன் மேலும் பேசியதாவது: கடந்த பத்து வருடகாலமாக தமிழரசு கட்சியின் நடவடிக்கைகளை அவதானித்துவந்தேன், தமிழரசுகட்சியால் தமிழர்களுக்கு எந்தவித நன்மையும் ஏற்படப்போவதில்லை என்பதை அறிந்துகொண்டேன் இந்த நாட்டில் தமிழர்களின் உரிமையை நிலைநாட்டவேண்டும் என்ற எண்ணம் எனக்கு உருவாகியது. திரு ஜி ஜி. பொன்னம்பலத்திடம்சென்று இதுபற்றி பேசியபோது அவர், தமிழர்கள் எல்லோரும் இந்நேரத்தில் ஒன்று திரண்டு பாராளுமன்றத்திற்கு அங்கத்தவர்களை போட்டியில்லாமல் அனுப்பவேண்டும் என்று கூறினர். கொழும்பில் கடந்த பல மாதங்களாக இதற்காக முயற்சிகளை எடுத்துவந்தோம். திடீரென தேர்தல் வந்தபின்பும் நாங்கள் முயற்சிகளை கைவிடவில்லை 9-ம் திகதி வரை திரு செல்வநாயகத்திற்கு சந்தர்ப்பம் கொடுத்துள்ளோம் தமிழர்கள் எல்லோரும் அங்கத்தவர்களை போட்டியில்லாமல் அனுப்பினால் சிங்களவர்கள் பயப்படுவார்கள் அதனால் நாம் எமது உரிமையைபெற்றுக்கொள்ள முடியும்.

**வேலையில்லா திண்டாட்டம்**

கடந்த எட்டு வருடகாலமாக வாலிபர்கள் மட்டுமின்றி, இத்தொகுதி மக்களும் தமிழரசு கட்சியினரை நம்பினர். ஆனால் அந்த நம்பிக்கை எந்த நன்மையும் அளிக்கவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. படித்த வாலிபர்கள் வருடந்தோறும் நூற்றுக் கணக்கில் பாடசாலையிலிருந்து வெளியேறி உத்தியோகமற்று கஷ்டப்படுகிறார்கள். நான் இத்தொகுதி அங்கத்தவராக தெரிவுசெய்யப்பட்டால் நிச்சயம் வாலிபர்களுக்கு அரசாங்கத்திலோ தனிப்பட்ட ஸ்தாபனங்களிலோ உத்தியோகம் பெற்றுக்கொடுப்பேன் என பகிரங்கமாக வாக்குறுதியளிக்கிறேன் இந்நேரத்தில் படிக்காத வாலிபர்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டும் இவர்களுக்கு கல்வி போதிப்பதற்காக இத்தொகுதியில் உள்ள நகர, கிராமசபைகளிலுள்ள ஒவ்வொரு வட்டாரத்திலும், புதிய பாடசாலைகள் ஆரம்பிக்க முயற்சிசெய்து எல்லோரும் கல்வி வசதிபெற பாடுபடுவேன். தற்பொழுது படிக்காத வாலிபர்களுக்கு இத்தொகுதியில் குடியேற்றதிட்டங்கள் ஆரம்பித்து அவர்களுக்கு வாழ்வளிப்பேன். இத்தொகுதி கடந்த எட்டு வருடகாலமாக எந்தவித முன்னேற்றமுமில்லாது இருந்துவருகிறது புதிய கைத்தொழில்களை ஆரம்பித்து நமது தொகுதியின் பொருளாதார அபிவிருத்தியை அதிகரிக்க பாடுபடுவேன்.

சுருக்க கூறினல் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் தமிழ் உரிமை பெறவும், சாவகச்சேரி தொகுதியை முன்னேற்றவும், இத்தொகுதியிலுள்ள படித்த வாலிபர்களுக்கு உத்தியோகம் பெற்றுக்கொடுக்கவும் படிக்காத வாலிபர்களுக்கு குடியேற்றத்திட்டங்கள் மூலம் காணி வழங்கவும் பாடுபடுவேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

56-ம் ஆண்டு முதல் தமிழ் இனத்தை கொஞ்சம் கொஞ்சமாக அழித்துவரும் திரு பண்டாரநாயக்காவின் கொள்கையைத்தான் தானும் பின்பற்றப் போவதாக கூறிய சிறிமாவை எந்தத் தமிழனாவது ஆதரிப்பானா? சிறிமாவின் வெற்றிக்காக மலைநாட்டில் லங்கா சமசமாஜ கட்சியினர் பிரசாரம் செய்தார்கள் 60-ம் ஆண்டு மார்ச் தேர்தலின் பின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரிப்பதாக சமஷ்டிக்கட்சியினர் மகாதேசாதிபதியிடம் கூறினார்கள். தமிழ் மொழியை அழிக்கும் சுதந்திரகட்சியை ஆதரிக்கும் சமஷ்டிக் கட்சியினர் தமிழ் உரிமையைப் பெற்றுத் தருவார்களா?

மீண்டும் இக்கூட்டத்தில் திரு செல்வநாயகத்திற்கு பகிரங்கமாக வேண்டுகோள் விடுகிறேன் பாராளுமன்றத்திற்குப் போட்டியில்லாமல் அங்கத்தவர்களை அனுப்புவதற்கு முன்வரும்படி தாழ்மையுடன் திரு செல்வநாயகத்தைக் கேட்டுக்கொள்கிறேன்

9-ம் திகதிக்கு முன் அவர்கள் இதற்கு ஒரு முடிவுகண்டால் முழு உலகுமே ஆச்சரியப்படும் ஒரே நோக்கத்திற்காக அடிப்படைக் கொள்கையில் வித்தியாசமின்றிப் போராடும் சங்கள் ஏன் ஒன்றுசேர முடியாது. தமிழ் மொழிக்கு உரிமை பெறுவதில் ஒன்றுசேர முடியும் சிங்களத்தை இலங்கை முழுவதும் உத்தியோக மொழியாக ஏற்றுக்கொண்டு பண்டாரநாயக்காவுடன் ஒப்பந்தம் செய்த திரு செல்வநாயகம் இலங்கை முழுவதும் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து பெற ஏன் தயங்குகிறார் என்று எனக்குத் தெரியவில்லை.

தமிழ்க்காங்கிரஸ தலைவர் திரு. ஜி ஜி பொன்னம்பலம் பேசியபோது கூறியதாவது: பண்டாரநாயக்காவுடன் செல்வநாயகம் செய்த ஒப்பந்தம் மூலம் இலங்கை முழுவதும், தனிச் சிங்களத்தை திரு. செல்வநாயகம் உத்தியோக மொழியாக ஏற்றுக்கொண்டார் என்பதையிட்டு நான் ஒரே மேடையில் அவருடன் வாதாட தயாராக இருக்கிறேன். நமது வீட்டில் தமிழ் பேசுவதற்கும், நமது பிள்ளைகளுடன் தமிழ் பேசுவதற்கும் சிங்களவரின் உத்தரவு நமக்கு அவசியமா? இதைத்தான் அந்த ஒப்பந்தத்தின் மூலம் திரு. செல்வநாயகம் பெற்றார்.

உடுப்பிட்டி முன்னாள் எம. பி. திரு. எம் சிவசிதம்பரம் பேசியதாவது:-

தமிழ் அரசாங்க ஊழியர்களின் கட்டாய ஓய்வு சம்பந்தமாகப் பாராளுமன்றத்தில் நான் கொண்டுவந்த பிரேரணைக்கு திரு. அமிர்தலிங்கம், திரு இராசதுரை ஆகியோர் வாக்களிக்கவில்லை. எனது பிரேரணையை கிளிநொச்சி முன்னாள் எம். பி திரு. சிவசுந்தரமே ஆமோதித்தார். தமிழ் அரசாங்க ஊழியர் பற்றி தமிழரசுக் கட்சியினர் பாராளுமன்றத்தில் வாதாடவேயில்லை. இம்முறை தமிழ்க் காங்கிரஸிற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள் 5 வருடகாலத்தில் தமிழரின் உரிமையைப் பெற்றுத் தருவோம்

காங்கேசன்துறைத் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர் திரு ஸ்ரீ பாஸ்கரன் பேசியதாவது:- தியாகிகளை அனுப்புங்கள் என்று தமிழரசுக் கட்சியினர் கூறுகின்றனர் திரு. செல்வநாயகம் தமிழரசுக் கட்சி அபேட்சகராகத் தெரிவு செய்த திரு. அகமத் அரசாங்கத்தை ஆதரித்து வாக்களித்தார். திரு கரியப்பர், திரு. முத்தப்பா ஆகியோரும் திரு செல்வநாயகத்தால் தெரிவுசெய்யப்பட்டவர்களே இப்படிப்பட்டவர்களைத் தெரிவு செய்வதா? திறமைசாலிகளைத் தெரிவுசெய்வதா தமிழுக்கு நன்மை தரும்.

உடுவில் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர் திரு சிவநேசன்

## யாழ்ப்பாண மாநகரசபை

### கேள்வி விளம்பரம்

28-1-1965 நண்பகல் 12-00 மணிவரை முதலாம் குறுக்குத்தெருவில் திறந்த சிமிந்தி லடிகால் கட்டுவதற்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளில் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்

2. 25-1-1965 நண்பகல் 12-00 மணிவரை கேள்வி விளம்பர கட்டுப்பணமாக ரூபா ஐம்பதும் (ரூபா 50) கேள்விப பத்திரப் பணமாக ரூபா ஐந்தும் (ரூபா 5) செலுத்தி மாநகரசபை மராமத்து என்ஜினியரிடமிருந்து கேள்வி விளம்பர விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம் கேள்வி விளம்பர விண்ணப்பப் பணம் திருப்பிக் கொடுக்கப்படும். ஆனால் கேள்வி விளம்பர கட்டுப்பணத்தை தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர் ஒப்பந்தத்திற்குள் உட்பட்ட பின்னர்தான் திருப்பிக் கொடுக்கப்படும்.

3. மேலும் விபரங்கள் காரியாலய நேரத்தில் யாழ்ப்பாண மாநகரசபை மராமத்து என்ஜினியரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பம்: ஏ. எச். ஏ. சமி,
மாநகரசபை ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகரசபை மண்டபம்,
யாழ்ப்பாணம்.
28-12-64. 1249

## அறிவித்தல்

ஊர்காவற்றுறைப் பட்டின சபைக் காரியாலயம், ஊர்காவற்றுறை கருவில் வீதியில் இருக்கும் அபாய நிலையில் இருந்த 100-ம் இலக்கக் கட்டடத்தில் இருந்து 70-ம் இலக்க கட்டடத்திற்கு 1964-ம் ஆண்டு மார்கழி மாதம் 31-ந் திகதி மாற்றப்படுமென்பதை இத்தால் அறியத்தருகிறேன். இம்மாற்றம் பொது மக்களின் வசதியையும் கருதியே செய்யப்படுகிறது.

வ. ச. ஜயாத்துரை,
தலைவர்,
பட்டின சபை,
ஊர்காவற்றுறை.

30-12-64. 1250

வரி விளம்பரம்

**பொங்கல் வாழ்த்து**

பல சைஸ்களில், அழகிய வர்ணப்படங்களடங்கிய பொங்கல் வாழ்த்து விற்பனைக்குண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தமிழ்ப்பண்ணை, யாழ்ப்பாணம். 1398

**காணவில்லை**

யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி வீதி 6/2 இலக்கத்திலிருந்து பார்வதி என்னும் பெண்பிள்ளை, நிறம் கறுப்பு, உயரம் 4' 8", வயது 15 அளவில், 29-12-64 செவ்வாய்க்கிழமை மாலை 7 மணி முதல் காணவில்லை. யாராவது கண்டால் மேற்குறித்த விலாசத்திற்கு அறியத்தரவும். விபரம் தெரிவிப்பவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1408

**விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் அம்பலவாணர் வீதியிலுள்ள 126/1, நம்பர் குடியிருப்புக்காணி பரப்பு 2 குழி 6 5/8 விற்பனைக்குண்டு. விலை விபரம் நேரில் இந்த விலாசத்தில் காணவும். S P பொன்னுசாமி, 126/1, அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம். 1418

வீட்டோடு 3 பரப்புக் காணி அம்மன் ரோட்டு கந்தர்மடத்தில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: சிவசுப்பிரமணியம், 32, அம்மன் ரோடு, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1411

**தொய்வு, நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம், மந்திரிமார், அரசியல் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றுநோக் இலும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

## வைகுந்தவாசன் போட்டியிடலாம்

நல்லூர், வியாழன்

காங்கேசன்துறையில் சமஷ்டி கட்சி போட்டியிடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. யூனியன்கட்சியின் சார்பில் திரு வைகுந்தவாசன் போட்டியிடலாமெனத் தெரிகிறது.


**ஸ்ரீ மனோகரா**
(யாழ்ப்பாணம்) போன் 483
Daily at 4, 7, 9-45 p. m.
NAYOKA AND THE TIGER MAN

**REGAL — JAFFNA**
NOW SHOWING
Virginia Maskell
Paul Rogers
in
WILD AND THE WILLING
( Adults Only )

**ராஜா சினிமா**
(சுழிபுரம்)
ஆனந்தன்
நடிக்கும்
விஜயபுரி வீரன்

2வது வெற்றி மாதர்!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
மாலை 2-30 இரவு6-30,9 30க்கும்
டி. எம். சௌந்தரராஜன்
நடிக்கும்
பட்டினத்தார்

2-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) மோடேர்ன் (பதுளை) ராஜ் (நீர்கொழும்பு)
14-ந் திகதி தொடக்கம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன் - சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
கர்ணன்
(ஈஸ்மென் கலர்)

**SCHOOL OF TECHNOLOGY**
**JAFFNA**
**Electrical Engineering Practice**
Course leading to City & Guilds of London Institute
Examinations Commences on 18-1-65
Preliminary & Intermediate Exam May 1966
Past Successes of the School

| | | | | |
|---|---|---|---|---|
| Preliminary | 1962 | Sat | 17 | Passed 11 |
| Intermediate | 1962 | Sat | 2 | „ 0 |
| Preliminary | 1963 | Sat | 14 | „ 10&2in one Sect |
| Intermediate | 1963 | Sat | 10 | „ 3&1 „ |
| Preliminary | 1964 | Sat | 12 | „ 10&2 „ |
| Intermediate | 1964 | Sat | 12 | „ 4&2 „ |

Apply Immediately to:-
School of Technology, "Citadel", Jaffna.
2nd January, 1965 Director

## போர்க்களமாகியிருக்கும் மன்னார் பகுதி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டுக் காவல் புரியப்படும் இவர்கள் பாடு எவ்வளவு கஷ்டமுறுவார்கள், உணவையாவது கண்டிருப்பார்களா என்றெல்லாம் கற்பனை செய்ய வேண்டியதாயிற்று. 'கூரை இல்லை காவல்' என்று சொல்லிக் கொண்டு மேற்கொண்டு நடந்தோம்.

இயற்கையின் சீற்றத்துக்கு மனிதர்கள் என்ன, கடவுளர் கூட ஆளாக வேண்டி ஏற்பட்டது என்றே கூறவேண்டும். தலைமன்னார் மாரி அம்மன் கோவில் முன்மண்டபம் தரைமட்டமாகியிருக்கக் காணப்பட்டது. அந்த ஆலயத்தைத் தாண்டிச் சென்றதும் தலைமன்னார் பிள்ளையார் கோவில் தென்பட்டது. முன்னர் கூறிய ஆலயத்தின் மூலஸ்தான மண்டபமாவது எஞ்சியிருந்தது. ஆனால் விக்கினம் தீர்க்கும் விநாயகர் ஆலயம் முற்றிலும் தரைமட்டம். யானை முகத்தோனும், சட்டவிரோதக் குடியேறக்காரர் போலவே கடும் வெய்யிலில் கருகிக் கொண்டிருந்தார்.

இறைவா உனது திருவிளையாடல்களுக்கு நீயுமா ஆளாகினாய்? மனிதர்கள் — உக்தன் மக்கள் துயருறும்போது நீயும் சேர்ந்து துயருகிறாய் உனது சக்தியும் மகத்துவமும் எழுத்தில் வடிக்கக்கூடியதா? மனம் பேசியது எங்களுக்குள்.

விநாயகரை தரிசித்துவிட்டு மேற்கொண்டு நடந்தோம். வழிநெடுகிலும் கல்வீடுகள் கூட தரைமட்டமாகியிருக்கக் கண்டோம். நல்ல தண்ணீர் மொள்ள வந்த பெண்களின் முகத்தில் செந்தளிப்பு என்ற சொற்றொடரால் கூறக்கூடிய ஒன்றைக் காணமுடியவில்லை. ஒருவாறு 'பியர்' புகையிரத நிலையத்தை அடைந்தோம். பியர்பாலத்தின் பக்கக் கம்பங்கள் முறிந்து கிடந்தனவாகிலும் பாலத்துக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை. சுங்க இலாகா, புகையிரத இலாகா ஊழியர்களின் விடுதிகள், காரியாலயங்கள் சகிக்க முடியாத நிலையில் சேதமடைந்தன.

"சூறாவளியினதும், கடல் அலைகளினதும் தாண்டவத்துக்கு இந்தக் கட்டடமெல்லாம் ஒரு பண்டமா, என்னையே கரைசேர்த்திருக்கும் அவற்றின் சூரத்தனத்தை என்னென்று நினைக்கிறீர்கள்" என்று கேட்டது கரையில் விண்டுகள் சகிதம் நின்று கொண்டிருந்த "கொஸ்சென் மட்ராஸ்" (Goschen Madras) என்ற மிகப் பிரமாண்டமான கப்பல். சுமார் 200 யார் நீளமும் சுமார் 60 அடி உயரமும் சுமார் 30 அடி அகலமும் கொண்ட அந்த இராட்சத கப்பலை சூறாவளியும், கடலும் சேர்ந்து கரை சேர்த்திருக்கின்றனவே என்று எண்ணும்போது கடலில் மீன்பிடிக்கச் சென்ற மயிலிட்டி மக்கள் உயிர் நீக்காமல் திரும்பியிருக்கக்கூடாதா என்று எப்படி எண்ண முடியும்? கொழும்பில் உள்ள வர்த்தகர்களுக்கு சரக்குகளைக் கொண்டு வந்ததாம் அந்தக் கப்பல். கப்பலின் மேற்தளத்திலிருந்து சரக்குகளை இறக்குவதற்கு உதவும் சிறுசிறு தோணிகள் நாலு, ஐந்து தரையில் வைக்கப்பட்டிருந்தன. மீண்டும் புயல் அடித்தால் கப்பலைச் சரித்துவிடுமோ என்ற அச்சத்தில் கம்பிக் கயிறுகளால் இழுத்துக் கட்டியும், இரும்புக் கேடர்களால் மீண்டு கொடுக்கப்பட்டிருந்தன. கப்பலின் தளபதி, தனது குடும்பத்தாருக்கு என்ன நேர்ந்தது என்பதுபற்றி அறிய இந்தியா சென்றுவிட்டதாய் கூறப்பட்டது. மற்றைய மாலுமிகள் தப்பிஓட்டிய அரசாங்க கட்டடம் ஒன்றில் சமைத்து சாப்பிடுவதைக் கண்டோம். கப்பலுக்குள் சென்று பார்க்க அங்கு நின்ற இலங்கை சுங்கப்பகுதி அதிகாரியிடம் அனுமதி கேட்டபோது அது அபாயமான நிலையில் இருக்கும் போது பார்வையாளரை அனுமதிப்பது உகந்ததல்ல என்று அவர் கூறியதும் சரியென்று திரும்பிவிட்டோம்.

தலைமன்னார்பியர் புகையிரத நிலையத்துக்கு அருகிலேயே பள்ளியும் இருக்கிறது. தலைமன்னாரிலிருந்து மன்னார்வரை பஸ்ஸில் வரும்போது கண்ட காட்சியை சிறிதளவாகுதல் எழுதியே ஆகவேண்டுமென எண்ணுகிறோம்.

## மாவு தட்டுப்பாடு

ஊர்காவற்றுறை, புதன்

சரவணை — வேலணைக் கிராமங்களில் கடந்த சில நாட்களாக மாவுக்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இங்குள்ள பாண் போறணைகளில் சொற்பமான பாண் தயாரிக்கப்படுவதால் மக்கள் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றார்கள்.

அத்தியாவசியமான உப உணவுப்பொருள்களும் கிடைப்பதில் கஷ்டமிருப்பதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. பங்கீட்டு உணவு பொருள்கள் வாரத்தில் கொடுக்கப்படுவது பற்றி இங்குள்ள அநேக கடைகளில் விளம்பரம் செய்யப்படுவதில்லை எனவும் புகார் காணப்பட்டுள்ளது.

## சரக்குவண்டி தடம் புரண்டது

கொழும்பு, புதன்

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கி வந்துகொண்டிருந்த சரக்கு வண்டி 182-வது மைல் தொலைவில் பாதையைவிட்டு விலகியது. எனினும் இவ் விபத்தால் எவரும் காயமடையவில்லை. பாதையில் படுத்திருந்த இரு எருமைகள்மீது புகையிரதம் சென்றமையால் இன்று அதிகாலை இவ் விபத்து ஏற்பட்டது.

## ஊர்காவற்றுறை பட்டினசபைத் தலைவர் தெரிவு

ஊர்காவற்றுறை, புதன்

ஐந்து அங்கத்தவர்களைக்கொண்ட ஊர்காவற்றுறை பட்டின சபையின் புதிய தலைவர் தெரிவு இம்மாதம் 18-ம் திகதி நடைபெறும் என இன்று அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்று அங்கத்தவர்கள் சமீப காலத்தில் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் திரு. வே. சிவசம்பு தலைவராகத் தெரிவுசெய்யப்படுவார் என எதிர் பார்க்கப்படுகிறது. திரு. சிவசம்பு முதல் ஒன்றரை வருடத்திற்கும், அடுத்த ஒன்றரை வருடத்திற்கு திரு. எஸ். எம். அல்பிரட் தலைவராகவும் வரக்கூடியதாக ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. மூன்று வருடத்திற்கு திரு. செல்வராசா உப தலைவராகத் தெரிவுசெய்யப்படலாம் எனவும் அறியப்படுகிறது.

## பேராசிரியர் விஜயசேகரா ராஜினாமா

கொழும்பு, புதன்

இலங்கை பல்கலைக்கழகத்தின் கலைப்பகுதியின் தலைவரும், சமஸ்கிருதப்பகுதி பேராசிரியருமான பேராசிரியர் எச். டி. ஏ. விஜயசேகரா தமது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார். இவர் தனது ராஜினாமாவுக்கான காரணங்கள் எதையும் தமது ராஜினாமாக் கடிதத்தில் தெரிவிக்கவில்லை. பேராசிரியர் விஜயசேகரா அண்மையில் நடைபெற்ற பல்கலைக்கழக உபவேந்தர் தேர்தலில் போட்டியிட்டார் என்பதும், உப வேந்தராக சேர் நிக்கலஸ் அட்டிகலையே மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கிறது

கொழும்பு, புதன்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் போட்டியிடும் அபேட்சகர்கள் நாளைக் காலை ஹொரகொல்லையிலுள்ள பண்டாரநாயக்கா சமாதியின் முன்னிலையில் கட்சிப் பிரமாணம் செய்துகொள்ள விருக்கின்றனர். கட்சியின் கொள்கைகளிலிருந்து தவறாது, காலஞ்சென்ற தலைவரின் வழியில் செல்வதென்ற சத்தியப் பிரமாணத்தை அவர்கள் அப்போது ஏற்றுக்கொள்வர்.

கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் புனிதநகரான அனுராதபுரத்திலுள்ள சிறி மகாபோதியில் இம்மாதம் 16-ந் திகதி ஆரம்பமாகும் என கட்சி வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

ஐக்கியதேசியக் கட்சி, தலதா மாளிகையில் நடைபெறும் வைபவம் ஒன்றின்பின்னர் தனது தேர்தல் பிரசாரக் கூட்டங்களை கண்டியில் 12-ந் திகதி ஆரம்பிக்கும்.

## தியாகம்செய்ய..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசும் போது, தமிழ்த் தொகுதிகளில் எல்லோரையும் ஒரே அணியாக அனுப்ப வேண்டும் என்றுகூறும் தமிழரசுக்கட்சியினர் ஏன் மட்டக்களப்பு, மூதூர் ஆகிய இரட்டைத் தொகுதிகளில் ஒருவரை மட்டும் நிறுத்த வேண்டும். 20 தமிழ் தொகுதிகளில் தமிழரசுக்கட்சியினர் 17 அபேட்சகர்களை மட்டுந்தானே நிறுத்துவார்கள். மற்ற மூவரும் சமஷ்டிக்கு எதிராக இருக்கமாட்டார்களா? ஐந்து பேராவதும் திறமைசாலிகளாக இருந்தால் நமது உரிமையைப் பெற முடியும்.

கோப்பாய் அபேட்சகர் திரு குணரத்தினம், பருத்தித்துறை அபேட்சகர் திரு. என். நடராசா, ஸ்ரீதரன் மற்றும் பலர் பேசினார்கள். கூட்ட முடிவில் தேர்தல் பிரசாரத்திற்காக வாலிபர்களின் தொண்டர்படையொன்று திரட்டப்பட்டது.

## ஹியு பெர்னண்டோ போட்டியிடார்

கொழும்பு, புதன்

முன்னாள் சபாநாயகர் திரு. ஹியு பெர்னண்டோ தாம் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடப்போவதில்லையென அறிவித்துள்ளார். "எனினும் நான் பார்லிமெண்டில் கடமையாற்றிய நேரத்தில் ஏற்பட்ட அனுபவங்களையும், சில சுவையான தகவல்களையும், தகுந்த நேரத்தில் மக்களுக்குத் தெரிவிக்க முயற்சிப்பேன். எங்களுடைய அரசியல்பற்றியும், அரசியல்வாதிகள்பற்றியும் தக்கபடி பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்கு இது வழிசெய்யும் என நான் நம்புகிறேன். காத்தாண்டியா, வென்னப்புவா மக்களுக்கு என் நன்றி உரித்தாகுக" எனவும் திரு பெர்னண்டோ தெரிவித்தார்.

## தகா, சில்வாவுடன் சேர்ந்தார்

கொழும்பு, புதன்

காலி முன்னாள் எம். பி. தகநாயகா, திரு. சி. பி. டி. சில்வாவின் ஸ்ரீலங்கா சுதந்திர சோஷலிஸக் கட்சியுடன் சேர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

கொழும்பு, புதன்

அரசாங்க சூறாவளி நிவாரண நிதிக்கு ரூபா 4 கோடிக்கு மேல் சேர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சூறாவளியினால்

## காணமற்போனவர்களின் பெயர் விபரங்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

சூறாவளிக் காற்றினால் கடலில் காணமற்போன மயிலிட்டிவாசிகளும், அவர்களின் பராமரிப்பில் உள்ளவர்களின் விபரமும்:-

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ. மார்க்கண்டு | மனைவி | 5 | பிள்ளைகள் | |
| வே. கல்லையா | " | 4 | " | |
| க. முருகேசு | " | 4 | " | |
| மு. சாம்பசிவம் | " | 4 | " | |
| க. சிவஞானி | " | 2 | " | |
| ம. சின்னராசா | " | 2 | " | |
| ச. செல்வராசா | " | 5 | " | |
| த. செல்லத்துரை | " | 4 | " | |
| க. பூபாலசந்திரன் | " | 4 | " | |
| மி. அந்தோனிப்பிள்ளை | " | 3 | " | |
| க. கணபதிப்பிள்ளை | " | 4 | " | |
| அ. வேதநாயகம் | " | 4 | " | |
| அ. குணரத்தினம் | " | 5 | " | |
| ச. பாலகிருஷ்ணம் | " | 6 | " | |
| செ. வல்லிபுரம் | " | 1 | பிள்ளை | |
| சி. ஆனந்தவேல் | " | 1 | " | |
| அ. சவரிமுத்து | " | 1 | " | |
| வே. சிற்றம்பலம் | " | 1 | " | |
| வ. கனகரத்தினம் | | தனி | | |
| ப. இராசசிங்கம் | | " | | |
| மு. கிருஷ்ணசாமி | | " | | |
| இ. ஜெயராமன் | | " | | |
| செ. அந்தோனிப்பிள்ளை | | " | | |
| செ. அருச்சுனன் | | " | | |
| க. சண்முகம் | | " | | |
| சி. செல்லத்தம்பி | | " | | |
| க. முருகுப்பிள்ளை | | " | | |
| வி. இளையதம்பி | | | மனைவி | |
| தே. திருச்செல்வம் | | | " | |
| வி. தம்பி அப்பு | | | " | |
| மு. இராமசாமி | | | " | |
| ஐ. சின்னத்தம்பி | | | " | |
| சா. செல்லத்துரை | | | " | |
| கி. அந்தோனிமுத்து | | | " | |
| ச. கந்தசாமி | மனைவி | 5 | பிள்ளைகள் | தாயார் |
| சி. கந்தசாமி | " | 4 | " | " |
| தே. அருணப்பு | " | 1 | பிள்ளை | " |
| ஐ. ஆனந்தவேல் | | 4 சகோதரம் | தாய் | தந்தை |
| கு. பாக்கியநாதன் | மனைவி | | " | " |
| ம. அருளானந்தம் திரவியம் | தாயார் | | பேத்தியார் | |
| செ. பாலசிங்கம் | | | | தாயார் |
| க. தம்பித்துரை | மனைவி | 1 | பிள்ளை | தாய் |
| வி. பராராஜசிங்கம் | " | 1 | " | |
| சி. குமாரசுவாமி | " | 1 | " | வளர்ப்பது |

சூறாவளிக்காற்றினால் கடலில் காணமறபோன பலாலிவாசிகளும், அவர்களின் பராமரிப்பில் உள்ளவர்களின் விபரமும்:-

| | |
|---|---|
| சின்னப்பொடி அந்தோனிமுத்து | மனைவி 1 பெண்குழந்தை |
| கிறிஸ்தோபர் அந்தோனிப்பிள்ளை | " 1 " |
| சின்னத்துரை ஆரோக்கியம் | " 2 " |
| | 2 ஆண்குழந்தை |
| மாரிமுத்து துரைசாமி | " 3 வளர்ப்பு பிள்ளை, 2 குமர்ப்பிள்ளைகள், 1 ஆண் குழந்தை 6 வயது |
| சின்னத்தம்பி நடராசா | மனைவி தாய் |
| இயக்கரியாஸ் சாமினாதன் | 2 ஆண்பிள்ளைகள், 1 பெண்பிள்ளை, தாய், சகோதரர் |
| கஸ்பார் தியோனிஸ் | 1 குமர்ப்பிள்ளை, 1 ஆண்பிள்ளை, 2 சகோதரர் |
| யாக்கோப் யேசுராசா | மனைவி (கர்ப்பிணி) |
| சின்னப்பொடி சின்னத்துரை | மனைவி 1 மகன் |
| சின்னத்துரை செபமாலை | " 1 " |
| சின்னத்தம்பி செல்லத்துரை | கைம்பெண் |

சூறாவளியால் பாதிக்கப்பட்ட மற்றைய இடங்களில் காணமற்போனவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டுவருகின்றன. இவை பின்னர் இங்கு வெளியிடப்படும்.

## இந்தியாவில் அகப்பட்டிருக்கும் இலங்கையர்கள்

### நாடு திரும்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், புதன்

சூறாவளியினால் இலங்கை-இந்திய போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டிருப்பதன் காரணமாக, இலங்கையர்கள் பலர் இன்னும் இந்தியாவில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் சென்னையிலுள்ள இலங்கைத் தூதுவர் காரியாலயத்துடன் தொடர்பு கொள்வதன்மூலம் நாடு திரும்ப அவசியமான ஒழுங்குகள் செய்யப்படும் எனத் தெரிகிறது.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பாரந்தூக்கும் போட்டியில கலந்துகொள்ள இவர்கள் வந்திருந்தனர். இந்திய ஹைகமிஷன் இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு தலா 5 ரூபாய்வீதம் வழங்கி வருகிறது.

## 4 கோடியாகியது

கொழும்பு, புதன்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சூறாவளி நிவாரண வேலைகளுக்கென சுமார் 4 கோடி ரூபா வெளிநாட்டு உதவி தேவைப்படுமென அரசாங்கம் மதிப்பீடு செய்துள்ளது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.